# இன்றைய இறைவார்த்தை

# 04-12-2014

**திருவருகைக்காலம் – 1ஆம் வாரம் – வியாழக்கிழமை**
**முதலாம் ஆண்டு**

**முதல் வாசகம்:**

மெசியா மீது நம்பிக்கை கொண்ட நேர்மையான மக்களினம் உள்ளே வரட்டும்.
இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்: **26 : 1 – 6**

நமக்கொரு வலிமைமிகு நகர் உண்டு. நம்மைக் காக்க அவர் கொத்தளங்களை அமைத்துள்ளார். வாயில்களைத் திறந்துவிடுங்கள். அவர்மீது நம்பிக்கை கொண்ட நேர்மையான மக்களினம் உள்ளே வரட்டும். அவர்கள் மன உறுதி கொண்டவர்கள். உம்மீது நம்பிக்கை உடையவர்கள். அவர்களை அமைதியால் நீர் உறுதிப்படுத்துகின்றீர். ஆண்டவர் மீது என்றென்றும் நம்பிக்கை கொள்ளுங்கள். ஏனெனில், ஆண்டவர், என் ஆண்டவர், என்றும் உள்ள கற்பாறை! உயரத்தில் வாழ்வோரை அவர் தாழ்த்துகின்றார். வானுற உயர்ந்த நகரைத் தகர்க்கின்றார். அதைத் தரைமட்டமாக்கி, புழுதியோடு புழுதியாக, மண்ணோடு மண்ணாகச் செய்கின்றார். எளியோரின் காலடிகளும் ஏழைகளின் பாதங்களும் அதை மிதிக்கும்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**
திருப்பாடல்கள்: **72 : 1–2, 7–8, 12–13, 17** (பல்லவி **7)**
பல்லவி: ஆண்டவருடைய பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்.

1. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு. மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட, ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்! உயர் குடியினர்மீது நம்பிக்கை வைப்பதைவிட, ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்! பல்லவி
2. நீதிமான்கள் செல்லும் வாயில்களை எனக்குத் திறந்துவிடுங்கள். அவற்றினுள் நுழைந்து நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன். ஆண்டவரது வாயில் இதுவே! இது வழியாய் நீதிமான்களே நுழைவர். என் மன்றாட்டை நீர் கேட்டதால், எனக்கு நீர் வெற்றி அளித்ததால், உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். பல்லவி
3. ஆண்டவரே! மீட்டருளும்! ஆண்டவரே! வெற்றிதாரும்! ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்! ஆண்டவரது இல்லத்தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம். ஆண்டவரே இறைவன் அவர் நம்மீது ஒளிர்ந்துள்ளார். பல்லவி

# இன்றைய இறைவார்த்தை

# 04-12-2014

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:** எசாயா **55 : 6**
அல்லேலூயா, அல்லேலூயா!
ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள்.
அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே விண்ணரசுக்குள் செல்வர்.

தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: **7 : 21, 24 – 27**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “என்னை நோக்கி, ‘‘ஆண்டவரே, ஆண்டவரே’’ எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர். ஆகவே, நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங்காற்று வீசியது. அவை அவ்வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை. ஏனெனில் பாறையின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது. நான் சொல்லும் இந்த வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது தம் வீட்டைக் கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார். மழை பெய்தது. ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பெருங்காற்று வீசியது. அவை அவ்வீட்டைத் தாக்க, அது விழுந்தது. இவ்வாறு பேரழிவு நேர்ந்தது.’’

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனை:**
ஆண்டவரே, ஆண்டவரே, என்று சொல்பவர், செபிப்பவர் விண்ணரசு சேரமாட்டார். மாறாக, தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வார் என்னும் ஆண்டவரின் மொழிகள் இறை நம்பிக்கையுடைய அனைவருக்கும் அறைகூவல் விடுக்கும் வசனம் இது. நமது இறைப்பற்று சொல்லில் முடங்கி விடாமல், செயல்களில் வெளிப்பட வேண்டும். செப ஆர்வலர்களுக்கும் வெல்விளியாக இச்சொல் அமைந்துள்ளது. செபக்குழுக்களில் சேர்ந்து செபிக்கிறவர்கள் தங்கள் வாழ்வு தந்தையின் விருப்பப்படி அமைய முயற்சிக்க வேண்டும். இல்லாவிட்டால், செபம் பயனற்றதாக மாறிவிடும். நமது இறைப் பற்றும் பாறைமீது கட்டப்பட்ட வீடு போல அமையட்டும்.

**********